# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE SUBORDINATE COURT, AVINASHI

## MCOP - 39/2018

## RW – 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | க.பிரதீப் | | : | |
| **Father Name** | : | கந்தசாமி | | : | |
| **Village** | : | | **Calling** | : | |
| **Taluk** | : | | **Age** | : | /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 5th day of December 2024)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அவிநாசி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டி என்னை அங்கீகரித்து மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய கடிதத்துடன் நான் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். அந்த 04.12.2024-ம் தேதியிட்ட கடிதம் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும். சாட்சி சம்மனில் கேட்கப்பட்ட TN 42 B 3394 என்ற இரு சக்கர வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.2 ஆகும். அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான குமாரசாமி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் சான்று இல்லாததால் அவருக்கு ரூ.2,000/- அபராதம் வசூலிக்கப்பட்டது என்பதை காட்டக்கூடிய சோதனை அறிக்கை மற்றும் ரசீது உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் ஆஜர் செய்யப்படவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டிய நபருக்கு வேறு இடத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**